# அறுவைப் பக்கம்

## உங்களைத் திருத்தவே முடியாதா?



இந்த பிப்ரவரி மாசம் வந்தாலே நம்ம பசங்க தொல்லை தாங்காதுங்க.. சாதாரண நாள்லயே இந்த காதல் கீதல் எண்ணு தரையிலே காலு படாமா சும்மா பிகருகளோடை சுத்தி சுத்தி வாறதைப் பாத்து பாவமா, இன்னமும் தங்களுக்குன்னு ஒரு ஆளு செட்டாகம இருக்குற பட்டிணத்தார் கோஷ்டி எல்லாம் இவுக பண்ணிற கூத்தைப் பாத்து பாத்து இந்தக் காதல் புழுதிய நாமளும் இந்த மாசமாச்சும் கௌப்ப மாட்டமான்னு உள்ளுக்குள்ள ஏக்கத்தோட பார்த்து புழுங்கிட்டு இருக்குறது ஜொள்ளுப்பாண்டியோட மனச போட்டு புழிஞ்சு எடுத்துடுச்சு.

பாவம் பசங்க .. வேலண்டைன்ஸ் டே னாலே எல்லாரும் கையிலே ரோஜா பூவோட ஒரு கார்ட்டும் எடுத்துகிட்டு ஏதாச்சும் ஒரு பொண்ணைத் தேத்தறதே வாழ்வின் லட்சியமா சுத்திகிட்டு இருக்காவ.. கமான் காம்ரேட்ஸ்...

முதல்ல இந்த வேலண்டைன்ஸ் டேங்கறதே ஒரு நினைவு நாள் தாங்கோ.. நம்ம ஆளுங்க அன்னிக்கு ரோசா கொடுத்தா பொண்ணு கண்டிப்பா வாங்கி வச்சுபான்னு ஒரு தப்பான அபிப்பிராயத்திலே ஆசையா போய் மானாவாரியா அல்வா வாங்கிகிட்டு சொல்லவும் முடியாம வாங்கின அல்வாவை மெல்லவும் முடியாம சுத்திகிட்டு இருக்காவ..

அப்பூ முதல்ல என்ன பண்ணுங்கோ நீங்க ஒரு பொண்ண பாக்குறியன்னு வைங்க... ஓடனே காதல் பத்திக்குமா என்ன..? அதெல்லாம் நம்ம கிழிஞ்சல்கள், டிராஜேந்தர் பட கால கட்டங்கோ.

இப்போ இருக்குற இந்த குட்டிக கிட்டே எல்லாம் இந்த பார்த்த உடனே எல்லாம் காதல் தீய பந்தம் வச்செல்லாம் கொளுத்தவே முடியாதுங்கோ..

முதல்ல அவுக கிட்டே போய் பேசுங்க.. நம்ம சூப்பர் ஸ்டார் ஸ்டைல்ல பழகி பாருங்க... அப்போதானே நீங்க எப்படின்னு அவியளுக்கும் அவிய எப்படின்னு உங்களுக்கும் தெரியுவரும்..?

இப்படி முன்ன பின்ன தெரியாத (பார்த்தா தெரியரது இல்லீங்க கண்ணுகளா..! ) பொண்ணுககிட்டே போய் பொசுக்குன்னு நீங்க கார்டையோ ரோஜாவையோ எடுத்து நீட்டுனா ஆஹா கெடச்சுதுடா நமக்கு ஒரு அழகான ரோஜானு வாங்கிக் ஹேண்ட் பேக்கிலே வெச்சுகிட்டு ரோசா கொடுத்த ராசா யாருன்னு தெரியாம எஸ்கேப்பாய்டும்.

இப்படித்தான் போன வேலண்டைன்ச் டேக்கு நம்ம தோழி வந்து என்கிட்டே ஒரு டசன் ரோஜாவை எடுத்து காட்டி இவ்வளவும் வீடிலே இருந்து இங்கே வர்றதுக்குள்ள கெடச்சுதுடா பாண்டின்னு சொல்லுச்சு.. ஏம்மா எவன்னே தெரியாதே எதுக்கு வாங்கினேன்னு கேட்டா.. அட ரோசா எவ்ளோ அழகா இருக்கு பாவம் பய இந்த ஒரு நாளாச்சும் சந்தோசமா இருக்கட்டும்னு அசால்டா சொல்லுது..

நம்ம பசங்க மட்டும் என்ன இளிச்ச வாயங்களா என்ன.. ஆளாளுக்கு ஒரு டசன் ரோஜா வையும் பேர் எழுதாத கார்டுடையும் ஸ்பேர் பார்ட்ஸ் மாதிரி வாங்கி வச்சுகிட்டு போற வர்ற பொண்ணுக கிட்டே எல்லாம் ஏதோ பிட் நோட்டீஸ் கொடுக்கர ரேஞ்சுக்கு கொடுகறதே வேலைன்னு வெளுத்து வாங்கிகிட்டு இருக்காவ..

அட எப்படியோ காதல் தீ கண்ண பின்னானு பத்தி கிட்டு கொழுந்துவிட்டு எரிய ஆரம்பிச்சுடுச்சு.. என்ன பண்ணலாம்..? எப்படி மடக்கலாம்..? ன்னு கேட்குறீயளா..? மடக்கிபோட அவுக என்ன பைக் சைடு ஸ்டேண்டா என்ன?

முதல்ல இந்த வேலண்டைஸ் டேக்கு தான் ப்ரபோஸ் பண்ணுவேன்னு அல்ப தனமா நெனச்சுகிட்டு இருக்காதீகப்பு.. தீபாவளி அன்னிக்கு ரிலீஸ் பண்ண இது சூப்பர் ஸ்டார் படமா என்ன..? தவிற அன்னிக்கு ஏராளமா படம் ரிலீஸ் ஆகறதிலே உங்க படம் எதுன்னு தனியா தெரியாம போய்டுங்கோ..

சோ முதல்ல ப்ரொபோஸ் பண்ணரதுக்கு முன்ன கொஞ்சமாச்சும் அவுக கிட்டே பேசிப்பழகுங்க... எடுத்த உடனே கார்ட் எடுத்து நீட்டுனா அவ்ளோதான் ஓஹொ இவன் ஏதோ 'துள்ளுவதோ இளமை' கோஷ்டின்னு பிகர் ஹேர்பேண்ட்டை பிச்சுகிட்டு ஓடக்கூடிய சான்ஸ் ப்ரகசமா இருக்கு பார்த்துக்குங்க... நீங்க என்னமோ தெய்வீக காதல்ல தாஜ்மஹாலையே உங்க மனசிலே சொமந்துகிட்டுதான் இருப்பீக ஆனா அது உங்க காதல் கிளிக்கு தெரியாது இல்லையா? அதான் கொஞ்ச நஞ்சமாச்சும் அவுக மனசிலே என்ன இருக்குன்னு தெரிஞ்சுகிட்டு கியரைப் போடுங்கப்பு..

இல்லாட்டி வண்டி வீலிங் ஆகி ஆரம்ப கட்டத்திலேயே கவுந்துரும் ஜாக்கிரதை... அப்புறம் வுழுந்து வாறிகிட்டு முட்டி பேந்துருச்சு மனசு ஒடஞ்சிருச்சுன்னு குவாட்டர் தாடியோட டயலாக் வுட்டுகிட்டு இருக்குறதுல அர்த்தமே இல்லை...

'அட இவ்ளோ சொல்லிகிட்டு இருக்கேன் எங்கே ஓடுறீய..? '

'என்ன உங்க ஆளு வந்துட்டடளா.. அவளைப் பார்க்க ஓடுறீயளா..?'

'அட அந்த ரோசாப்பூவ வச்சுட்டு போங்கப்பூ...'

'என்ன வச்சுட்டு போன நான் எடுத்துக் கொடுத்து தேத்திடுவேனா..?'

ஐய்யய்யோ........ திருத்தவே முடியாது போல இருக்கே...!!!!

- ஜொள்ளுபாண்டி

## சமையல் பற்றிய உரையாடலை வைத்து திருமணமாகி எவ்வளவு காலம் என்று கண்டுபிடிக்க...

**கல்யாணமாகி ஒரு மாதம்**

கணவன்: என்ன குஞ்சு. சாப்பாட்டுக்கு அத்தனை கறி இருக்குதே. இதுக்கு மேலை சின்ன வெங்காயம் வெட்டி ஒம்லட் போடத் தான் வேணுமா? நீர் வாரும். வந்து இரும்.

மனைவி :இல்லையப்பா. ஒம்லட் ஒண்டு இருந்தால் நீங்கள் கொஞ்சம் கூடச் சாப்பிடுவியள். இதெல்லாம் ஒரு வேலையே? நீங்கள் பக்கத்திலை நிண்டு கதைச்சுக் கொண்டு நில்லுங்கோ. நான் அஞ்சு நிமிசத்திலை செய்திடுவன்

**கல்யாணமாகி மூன்று மாதங்கள்**

கணவன்: குஞ்சு இண்டைக்கு என்ன சாப்பாடு

மனைவி : கறிகளோடை ஒம்லட்டும் போட்டிருக்கிறன்

கணவன் : ஏன் சின்ன வெங்காயம் போடாமல் பெரிய வெங்காயம் போட்டிருக்கு

மனைவி : இது வெட்ட லேசப்பா. அதுதான்

**கல்யாணமாகி ஆறு மாதங்கள்**

கணவன் : என்ன கலா சாப்பிடலாமா?

மனைவி : கொஞ்சம் இருங்கோப்பா. இந்த சீரியல் முடியட்டும்.

மனைவி என்னப்பா. இந்த வெங்காயத்தை உரிச்சு தாறீங்களா?ஒம்லட் போடுறதுக்கு

**கல்யாணமாகி ஒன்பது மாதங்கள்**

கணவன் : என்ன இது வெங்காயமே இல்லாம ஒம்லட் போட்டு இருக்குது. எனக்குப் பிடிக்காதெண்டு உனக்குத் தெரியாதோ?

மனைவி : ஒரு நாள் இதை சாப்பிட்டாதான் என்னா? எல்லாத்தையும் நானே செய்ய ஏலுமா?

**கல்யாணமாகி ஒரு வருடம்**

கணவன் : என்ன இது. சாப்பாடு சப்பெண்டு இருக்கு. ஒம்லெட்டும் சின்னதா இருக்கு. ஒம்லட்டுக்கு உப்பும் இல்லை.

மனைவி : முட்டை என்னா நானா போடுறன். கோழி சின்னதா முட்டை போட்டதுக்கு நான் என்ன செய்ய? சும்மா நொய் நொய் எண்ணாமல் சாப்பிடுங்கோ

**கல்யாணமாகி நான்கு வருடங்கள்**

கணவன் : என்ன இண்டைக்கு உருளைக்கிழங்குக் கறி மட்டுமா?

மனைவி : பிறிஜ்ஜிலை முட்டை இருக்கு. வேணுமெண்டால் ஒம்லட் போட்டுச் சாப்பிடுங்கோ. நான் ரிவி பாக்கப் போறன். இல்லாட்டி இப்பிடியே தின்னுங்கோ. ஒரு நாள் ஒம்லட் இல்லாட்டி ஒண்டும் குறைஞ் சிடாது.

**கல்யாணமாகி இரண்டு வருடங்கள்**

கணவன் : இண்டைக்கு ஒண்டும் சமைக்க இல்லையா?

மனைவி : நான் சொப்பிங் பொயிட்டு இப்ப தான் வந்தனான். செய்து சாப்பிடுங்கோ. எனக்கும் சேத்து

**கல்யாணமாகி மூன்று வருடங்கள்**

கணவன் : இண்டைக்கு என்ன சமைக்க?

மனைவி : சோறும் வைச்சு பிறிஜ்ஜிலை இருக்கிற மீனையும் வைச்சு ஏதாவது ஒரு மரக்கறியையும் வையுங்கோ. தாங்க்ஸ்

**கல்யாணமாகி ஐந்து வருடங்கள்**

கணவன் : இண்டைக்கு என்ன சமைக்க?

மனைவி : என்னப்பா அதையும் நானே சொல்ல வேணும். எதையாவது இருக்கிறதைப் பாத்துச் சமையுங்கோவன்.

இதற்கு மேலே எழுதுவதற்கு எனக்குத் திராணியில்லைங்கோ...

- குசும்பனின் ஆக்கத்தைத் தழுவி எழுதப்பட்டது



## என் காதலே...

*கவலைப்படாதே.....*

*உன் கரம் பற்ற*

*இடி விழுந்தால் கூட*

*தாங்கிக் கொள்வேன்*

*என்கிறாய்... அன்பே!*

*என் கவலையெல்லாம்*

*ஏற்கனவே*

*இடி விழுந்தவன்*

*போலிருக்கும் நீ*

*மேலும் இடி விழுந்தால்*

*என்ன ஆவாய் என்பதுதான்......*

*இருவர் தட்டையும்*

*மாற்றி சாப்பிடுவதுதான்*

*காதலரின் இலக்கணம்*

*என்று கூறி*

*முக்கால் பிரியாணியை*

*காலி செய்து விட்ட*

*உனது தட்டையும்*

*கால் பிரியாணியை*

*காலி செய்து விட்ட*

*எனது தட்டையும்*

*மாற்றி விட்டாய்*

*ஹ்ம்ம்ம்ம்......*

*நேரடியாகவே கேட்டிருக்கலாம்...*

*என் ஜாதகத்தில்*

*ஒரு பெரிய கண்டம்*

*இருக்கிறது என்று*

*அடுத்த தெரு*

*ஜோசியக்காரர் சொன்னதை*

*நான் நம்பவே இல்லை*

*உன்னை பார்க்கும் வரை...*

*- இம்சை அரசி*